கொல்லநுலையின்

# பதியம்

விதையிலிருந்து விருட்சத்தை நோக்கி

விதை 01 விருட்சம் 02 விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 14ம் திகதி வெள்ளிக்கிழமை (30.11.2018)

**எமது மாணவர்கள் சிறைக்கைதிகள் அல்லர் சிறகடித்துப் பறக்கும் பட்டாம் பூச்சுகள்**

## கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் அப்பால் பண்பாட்டு நிகழ்வுகளும் அவசியம்



வெறுமனே கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் அப்பால் பண்பாட்டு நிகழ்வும் தற்கால பாடசாலை மாணவர்களுக்கு

3

## நேரமுகாமைத்துவப்படி, சீரிய ஒழுங்கமைப்புடன் நிகழ்வு அரங்கேறியது

நேரமுகாமைத்துவப்படி, சீரிய ஒழுங்கமைப்பு மூலம் கொல்லநுலைப் பாடசாலையில்



3

# கற்றலில் பின்தங்கிய, பாடசாலைக்கு வரவு குறைவாக உள்ள மாணவர்களுக்கு கலை நிகழ்வில் முன்னுரிமை!



கற்றலில் பின்தங்கிய, பாடசாலைக்கு வரவு குறைவாக உள்ள மாணவர்களுக்கு கலை நிகழ்விலே முன்னுரிமையளிக்கப்பட்டமை உண்மையில் அம்மாணவர்களின் திறமைகள் வெளிக்கொணரப்பட்டதோடு, கற்றலில் அவர்களின் ஆர்வமும் அதிகரிக்க

4

## உளம் மகிழ்ந்து நன்றி கூறுகின்றேன்.



வெள்ளி விழாவும், பண்பாட்டு நிகழ்வுகளிலும் கலந்து கொண்டு பூரண ஒத்துழைப்பினையும், நற்கருத்துக்களையும் வழங்கி எம்மோடு அந்நாள் முழுவதும் இணைந்திருந்த, குறுகிய கால இடைவெளியில் பல உதவிகளையும் விரைவாகவும், திருப்திகரமாகவும் செய்திருந்த அத்தனை உறவுகளுக்கும் எமது பாடசாலை சமூகத்தின் சார்பாக உளம் மகிழ்ந்து நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சா. விக்னேஸ்வரன் (அதிபர்)**

## தமிழை தமிழர்களே அழிக்கின்றனர்!



தமிழ்மொழியை தமிழர்களே அழிக்கும் பரிதாப நிலை இந்த மண்ணிலே நடைபெறுகின்றதென மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பாளர் த.மலர்ச்செல்வன் தெரிவித்தார்.

பெயருக்கு முன்னால் இடும் தந்தை அல்லது கணவனின் முதல் எழுத்துக்களை ஆங்கிலத்தில் எழுதுவதும், ஒப்பங்களை தமிழிலே இடாமல் ஆங்கிலத்தில் இடுகின்ற நிலையும், தமிழில் சில சொற்களை கூறினால் அநாகரீகம் என எண்ணி ஆங்கிலத்தில் சொல்லுகின்ற நிலையும் காணப்படுவதாக கூறினார்.

கொல்லநுலைப் பாடசாலையில் நடைபெற்ற வெள்ளி விழா நிகழ்விலே இதனைக்குறிப்பிட்டார்.

கொல்லநுலையின் பற்றியம்
விதையிலிருந்து விருட்சத்தை நோக்கி

வியாழக்கிழமை, 2018.11.29
கொல்லநுலை, கொக்கட்டிச்சோலை
மின்னஞ்சல் : kollanulaivv@gmail.com
www.kollanulaivv.blogspot.com

மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயமானது, முழுமையாக கிழக்கு மாகாணசபை பாடசாலைகளை கொண்டு அமைந்துள்ளமையுடன், இங்குள்ள அனைத்துப் பாடசாலைகளுமே கஸ்ட, அதிகஸ்ட பகுதிக்குள் அடங்குபவையாக உள்ளன. இப்பகுதிகளுள் உள்ள பாடசாலைகளுள் கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயமும் ஒன்றாகும். போக்குவரத்து இன்றிய நிலையிலும் கூட சிறப்பான ஆசிரிய சேவையின் பயனால், தேசிய சாதனைகளும் இப்பாடசாலை மாணவர்களினால் புரியப்பட்டுள்ளன. இவ்வாறான சாதனைகளையும், மாணவர்களது செயற்பாடுகளையும், ஆவணப்படுத்தும் நோக்கிலும், இளம் எழுத்தாளர்களுக்கு களமமைக்கும் வகையிலும் பாடசாலை அமைந்துள்ள சூழலை மையமாக கொண்டு “பற்றியம்” என்ற செய்தி மடல் வெளிவருகின்றது.

கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயத்தின் வெள்ளி விழாவைச் சிறப்பித்து (2018.11.10) முதலாவது பற்றியம் வெளியானது. இரண்டாவது இதழாக கொல்லநுலைப் பாடசாலை மாணவர்களின் திறமையினை கௌரவப்படுத்தும் நிகழ்வில் வெளிவருகின்றது. தொடர்ந்தும் இப்பற்றியம் பல்வேறு காத்திரமான படைப்புக்களையும் தகவல்களையும் தாங்கி வெளிவரும் என்ற நம்பிக்கையுடன்…

**என்றும்**
**“பற்றியம்”ஆசிரியர்**
**வ. துசாந்தன்**




எங்களது பாடசாலையின் இருபந்தைந்தாவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு, வெள்ளி விழாவும் பண்பாட்டு நிகழ்வுகளும் கடந்த கார்த்திகை 10ம் திகதி பாடசாலையில் நடைபெற்றன. இப்பண்பாட்டு நிகழ்விற்காக பாரம்பரிய பொருட்களைச் சேகரித்து பாரம்பரிய ரீதியான கண்காட்சியொன்றினை நடாத்தினோம். இதன்போது பாரம்பரிய பொருட்களை சேகரிக்கும் பணியில் ஈடுபட்டோம். இதன் பயனாக இதுவரை நாங்கள் கண்டறியாத முன்னோர்கள் பயன்படுத்திய பொருட்களை கண்டறிந்தோம்.

# பாராட்டுக்களால் ஆனந்தம் அடைந்தோம்

மேலும் பண்பாட்டு கலை நிகழ்விலும் ஈடுபட்டோம். எமது திறமையை மற்றவரிடம் வெளிக்காட்டும் களத்தினை கலை வழங்கியிருந்தது. நாங்கள் நிகழ்வில் பங்கேற்றபோது நிகழ்வினை பார்த்திருந்தவர்கள் எம்மை பாராட்டினார்கள், இப்பாராட்டு எங்களுக்கு அதிக மகிழ்ச்சியினை ஏற்படுத்தியிருந்தது. இந்நிகழ்வுகளின் மூலமாக சிறந்த அனுபவத்தினைப் பெற்றிருக்கின்றோம்.

**தரம் - 10 மாணவர்கள்.**
மட்/மமே/கொல்லநுலை
விவேகானந்த வித்தியாலயம்.




## கற்றலுக்கும் கற்பித்தலுக்கும்... (தொடர்ச்சி..)

மிகவும் அவசியமானதொன்றென மட்டக்களப்பு மேற்கு வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் க.ஹரிகரராஜ் குறிப்பிட்டார்.

கடந்த கார்த்திகை 10ம் திகதி கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயத்தில் நடைபெற்ற வெள்ளி விழாவும் பண்பாட்டு நிகழ்வும் தொடர்பில் கருத்துக்கூறுகையிலேயே இதனைக்குறிப்பிட்டார்.
பிரதிக்கல்விப் பணிப்பாளர் மேலும் குறிப்பிடுகையில்,

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் மிகவும் தொலைவில், பின்தங்கிய பிரதேசத்தில் உள்ள பாடசாலையான கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயத்தில், சனிக்கிழமை வார இறுதி விடுமுறை நாளில் பாடசாலை சமூகமும் பெற்றோரும் திரண்டு வந்து பாடசாலையில் முழுநாளும் தரித்திருந்து உரிய முறையில் நேர்த்தியாகவும் கச்சிதமாகவும் நீண்ட காலத்திற்குப் பின் பண்பாட்டு நிகழ்வினை நடத்தி முடித்திருப்பது பாராட்டிற்குரியதாகும்.
சீரற்ற காலநிலைக்கு மத்தியிலும் சிறப்பாக அதிதிகளைத் தெரிவு செய்து அனைத்து மாணவர்களும் ஒரு நிகழ்விலாவது பங்குபற்றக் கூடியதாக ஒழுங்கு செய்து கலாசார முறையிலான உணவு, உடை, சின்னம், வரவேற்பு, சோடனை அலங்காரம், கண்காட்சி என அனைத்து விடயங்களையும் ஒழுங்கு செய்தது அனைவரையும் ஈர்க்கும் வண்ணம் காணப்பட்டது. மிகவும் திட்டமிட்டு அனைவரும் கூட்டாக பல பிரயத்தனங்களுக்கு மத்தியில் இம்முயற்சியை இப்பாடசாலை முன்னெடுத்திருப்பது வலயம் ரீதியாக பாராட்டுதலுக்கு உரியது. அதிகமான அதிதிகளின் வருகையுடன் களைகட்டிய இவ்விழா அவர்களது உரையில் சிறப்பான ஒரு

## நேரமுகாமைத்துவப்படி, சீரிய .... (தொடர்ச்சி..)

வெள்ளி விழாவும் பண்பாட்டு நிகழ்வும் நடைபெற்றமை சிறப்பம்சமாகும் என அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலய அதிபர் சு.தேவராஜன் தெரிவித்தார்.

கடந்த கார்த்திகை 10ம் திகதி கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயத்தில் நடைபெற்ற வெள்ளி விழாவும் பண்பாட்டு நிகழ்வும் தொடர்பில் கருத்துக்கூறுகையிலேயே இதனைக்குறிப்பிட்டார்.
அவர் மேலும் குறிப்பிடுகையில்,
இலைக்கறிவகை, முன்னர் பாவித்த வீட்டு உபகரணங்கள், விவசாய உபகரணங்கள், விதைகள், கலை, பண்பாட்டு உபகரணங்கள், கூத்துக்குரிய ஆடை அலங்காரப்பொருட்கள், கண்காட்சிக்கு ஒழுங்கமைக்கப்பட்டிருந்தமை சிறப்புக்குரியது. குடிசை வாழ்க்கைமுறை, மூதாதையர் பாதுகாப்புமுறைகள் என்பனவும் காட்சிப்படுத்தியதோடு, போக்குவரத்துச் சாதனமான இரட்டை மாட்டு வண்டி, உழவுக்கலப்பை என்பனவும் சிறப்பிக்கப்பட்டிருந்தது சிறப்பம்சமாகும். வரவேற்பு தொடக்கம் நன்றியுரை வரைக்கும் சிறப்பான அறிவிப்பாளர்கள் மூலம் நிகழ்வுகள் நேரமுகாமைத்துவப்படி, சீரிய ஒழுங்கமைப்பு மூலம் நடைபெற்றமை சிறப்பம்சமாகும். அத்துடன் காவடி கிராமிய நடனம், கிராமியப்பாடல்கள், ஒப்பாரிப்பாடல், கும்மி கோலாட்டம் சிறப்பிலும் சிறப்பாக அமைந்திருந்தது. மேலும் பண்பாட்டு ஊர்வலம் என்பவற்றுடன், உணவு பரிமாறியதிலிருந்து அனைத்து நிகழ்வுகளும் சிறப்பானவையாகும். உணவு மிகப்பிரமாண்டமாக வழங்கப்பட்டதுடன், பண்பாடு சுவை என்பன பிரம்மாதம். ஆகவே அனைத்து நிகழ்வுகளும் சிறப்பாக இப்பாடசாலையில் நடைபெற்றது. இதற்காக உழைத்த அனைவருக்கும் மனப்பூர்மான நன்றிகள் என்றார்.

"பற்றியம்" எனும் பெயரில் பாடசாலை விடயங்களை உள்ளடக்கிய சஞ்சிகையில் கடந்த கால விடயங்கள் அன்றைய நிகழ்வின் முக்கியத்துவம் என்பன பதிவாக வெளியிடப்பட்டது. நஞ்சற்ற உணவு, இலைக்கறிக் கண்காட்சி, பாரம்பரியப் பொருட்களின் கண்காட்சி, விவசாய உபகரணங்கள், முன்னோர் பயன்படுத்திய பொருட்கள், பாரம்பரிய விளையாட்டுக்கள், கும்மி, வசந்தன், கூத்து, காவடி, வேடுவர் நடனம் போன்ற பண்பாட்டு நிகழ்வுகள், இலைகளில் பாரம்பரிய சிற்றுண்டி, செம்பிலே குடிநீர், நன்னாரி தேனீர் என ஒவ்வொரு விடயமும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இரண்டு வெவ்வேறான அமர்வுகளும் இரண்டிற்கும் இடையே பாயில் அமர்ந்து மரக்கறி போசனம் உண்ணக்கூடிய சூழல், கலாசார உத்தியோகத்தர்களது பிரசன்னம், ஊடகவியலாளர்களின் பங்கெடுப்பு, சிறப்பான ஒலிபரப்பு, அறிவிப்பு, சங்கங்களின் அனுசரணை, கடல் கடந்த நுலைமுனை அமைப்பின் ஒத்துழைப்பு இவ்வாறாக ஒவ்வொரு அம்சமும் மனதைத் தொடும் விதத்தில் இருந்தது. இவ்வாறான முயற்சியை முன்னெடுத்த பாடசாலை சமூகத்திற்கும் இந்நிகழ்வு ஏனைய பாடசாலைகளுக்கு முன்மாதிரியாக இருந்தது என்பதனால் இப்பாடசாலை சமூகத்திற்கும் எனது



சுவாமி விபுலாநந்தரின் இயற்பெயர் மயில்வாகனன் ஆகும். இவர் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் காரைதீவு என்னும் ஊரில் 27-03-1892 ஆம் ஆண்டு, பங்குனி மாதம், 27 ஆம் தேதி சாமித்தம்பி, கண்ணம்மா தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார்.




மண்முனை தென்மேற்கு பிரதேச சபையினரால் அண்மையில் கொல்லநுலையில் வாசிகசாலை திறந்து வைக்கப்பட்டது.



# விவேகானந்தரின் பொன்மொழிகள்

- உண்மைக்காக எதையும் துறக்கலாம், ஆனால் எதற்காகவும் உண்மையைத் துறக்கக் கூடாது.
- கடவுள் இருந்தால் அவனை நாம் காணவேண்டும், ஆத்மா இருந்தால் அதனை நாம் உணர வேண்டும், அப்படியில்லையென்றால் நம்பிக்கை இல்லாமல் இருப்பது நன்று. பாசாங்கு போடுவதை விட நாத்திகனாக இருப்பதே மேல்.
- உலகின் குறைகளை பற்றி பேசாதே. குறைகளை நோக்கி வருத்தப்படு, எங்கும் நீ குறைகளை காண்பாய். ஆனால், நீ உலகுக்கு உதவி செய்ய விருப்பினால் உலகை தூற்றாதே, குறை சொல்லாதே. குறை சொல்லி உலகை இன்னும் பலவீனப்படுத்தாதே. உலகின் குறைகள், குற்றங்கள் எல்லாம் அதன் பலவீனத்தால் விளைபவை அல்லவா.
- செயல் நன்று, சிந்தித்து செயலாற்றுவதே நன்று. உனது மனதை உயர்ந்த இலட்சியங்களாலும், சிந்தனைகளாலும் நிரப்பு. அவற்றை ஒவ்வொரு நாளின் பகலிலும் இரவிலும் உன் முன் நிறுத்து அதிலிருந்து நல் செயல்கள் விளையும்.
- வாழ்வும் சாவும், நன்மையும் தீமையும், அறிவும் அறியாமையும் ஆகியவற்றின் கலவைதான் மாயா, அல்லது பிரபஞ்சத்தின் இயல்பு. இவ் மாய்த்துள் நீ எல்லையற்று மகிழ்ச்சிக்காக அலையலாம், ஆனால் நீ தீமையையும் காண்பாய். தீமையின்றி நன்மை இருக்குமென்பது சிறுபிள்ளைத்தனம்.
- உலகில் உள்ள தீமைகளைப் பற்றியே நாம் வருந்துகிறோம். நம் உள்ளத்தில் எழும் நச்சுஎண்ணங்களைப் பற்றி சிறிதும் கவலை கொள்வதில்லை. உள்ளத்தை ஒழுங்குபடுத்தினால் இந்த உலகமே ஒழுங்காகிவிடும்.
- சுயநலமின்மை, சுயநலம் என்பவற்றைத் தவிர, கடவுளுக்கும் சாத்தானுக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை.
- உன்னை வலிமை உடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவன் ஆவாய்!

## கற்றலில் பின்தங்கிய... (தொடர்ச்சி)

வாய்பாக இந்நிகழ்வு அமைந்தமை சிறப்பாகும். என பட்டிருப்பு வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் ந.நேசகஜேந்திரன் தெரிவித்தார். கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயத்தில் கடந்த கார்த்திகை 10ம் திகதி நடைபெற்ற, வெள்ளிவிழாவும், பண்பாட்டு நிகழ்விலும் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இதனைக்குறிப்பிட்டார். உதவிக்கல்விப் பணிப்பாளர் தொடர்ந்தும் இங்கு, உரையாற்றுகையில்,

கொல்லநுலை விவேகானந்த வித்தியாலய வெள்ளி விழாவும் பண்பாட்டு நிகழ்வும் எனும் இவ்விழாவிலே பங்குபற்றுவதில் உளம் மகிழ்கின்றேன். இவ்விழாவானது செவ்வனே திட்டமிடப்பட்டு மிகச்சீரான முறையிலே நடைபெறுகின்றது. இதற்காக முன்னின்று உழைத்த அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர் என அத்தனைபேருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். வெள்ளிவிழாக்காணும் இப்பாடசாலையிலே 2004ம் ஆண்டு தொடக்கம் 2017வரை 13வருடங்கள் சேவையாற்றியுள்ளேன். என்றுமே மறக்கமுடியாத பசுமையான நினைவலைகளை தருவது இங்கு சேவையாற்றிய காலம். இப்பாடசாலையானது அதிகஸ்டப்பிரதேசத்தில் அமைந்துள்ளது. இங்கு பல வசதியீனங்கள் காணப்படுகின்றன. எனினும் அவற்றிற்கு வெற்றிகரமாக முகம்கொடுத்து வெற்றி நடைபோடுகிறது. பாடவிதான, இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் இப்பாடசாலை மாணவர்கள் நிகழ்த்தும் சாதனைகள் இதற்குச் சான்றாகின்றன. இவ்வெள்ளி விழா நிகழ்விலே பாடசாலை கடந்து வந்த பாதைகளை மீள்நினைப்பதோடு பாடசாலை சமூகத்திற்கு விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடியதாகவும் இன்றைய விழா அமைகின்றது.

தமிழரின் பண்பாட்டு கோலங்களிலே மொழி, இசை, கலை, உடை, உணவு (விருந்தோம்பல்) முதலானவை முக்கியம் பெறுகின்றன. இவை அத்தனையையும் இவ்விழா பிரதிபலிக்கின்றது. அறிவிப்பாளர்களின் நவிலும் நற்றமிழ் செவிக்கு இன்னமுது ஊட்டுகிறது. இசைக்கருவிகள், தாளவாத்தியங்கள் இல்லாத நிலையில், பண்பாட்டு இசைக்கருவிகளைத்தேடி அவற்றை இங்கே கொண்டுவந்து மாணவர்களைத் தேர்வுசெய்து, பயிற்சியளித்து இனிமையாக இசைத்த பண்பாட்டு இன்னியம் பரவசம் பாடசாலைச் சமூகத்துடன் இணைந்து தமிழர் பாரம்பரிய கலைகளான கும்மி, கோலாட்டம், வசந்தம், காவடி, நாட்டார்பாடல், மீனவர் நடனம், உழவர் நடனம் என அத்தனை நிகழ்வுகளும் கச்சிதமாக நெறியாள்கை செய்யப்பட்டு களரியிலே கண்ணுக்கு கலைவிருந்து படைத்தமை அருமையிலும் அருமை. கொழுக்கட்டை, நன்னாரிச்சாயம் என சிற்றுண்டியோடு வாழை இலை பரப்பி வந்தாரைக்கையமர்த்த தயிருடன் தமிழர் உணவுப்பரிமாற்றம் இனிமை. அதுமட்டுமின்றி பாரம்பரியப்பொருட்களின் கண்காட்சியும் நன்று.

இந்நிகழ்விலே நான் அவதானித்த விடயங்கள் இவையாயினும் என்னை மிகவும் கவர்ந்தது கற்றலில் பின்தங்கிய, பாடசாலைக்கு வரவு குறைவாக உள்ள மாணவர்களுக்கு கலை நிகழ்விலே முன்னுரிமையளிக்கப்பட்டமை உண்மையில் அம்மாணவர்களின் திறமைகள் வெளிக்கொணரப்பட்டதோடு, கற்றலில் அவர்களின் ஆர்வமும் அதிகரிக்க வாய்பாக இந்நிகழ்வு அமைந்தமை சிறப்பாகும். இவ்வித்தியாலயத்திலே இதுபோன்ற பல நிகழ்வுகள் நடைபெற வேண்டும். இவ்வித்தியாலயத்தின் சாதனைகள் தொடரவேண்டும். என ஆண்டவனை பிரார்த்திக்கின்றேன். அத்தோடு பாடசாலைக்கான ஆசிரிய ஆளணி முற்றாக கிடைக்கவேண்டும்,





# வெள்ளி விழாவும் பண்பாட்டு நிகழ்வுகளும்



# கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயத்தின்
## வெள்ளிவிழா காணும் பாக்கியம் பெற்ற முதல் அதிபர்

கடந்த 10.11.2018ம் திகதி மட்/ கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயத்தில் நடைபெற்ற வெள்ளிவிழாவும் பண்பாட்டு நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளும் பாக்கியம் கிடைக்கப்பெற்றமைக்கு இறைவனுக்கும், வித்தியாலயத்தின் ஏற்பாட்டுக்குழுவினருக்கும் முதற்கண் எனது இதயம் கனிந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.



மட்/ கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயத்தின் வெள்ளி விழாவிற்கான அழைப்பிதல் உரிய நேரத்தில் கிடைத்தமையினால் அன்றையதினம் நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டுள்ள நேரத்திற்கு ஒரு மணித்தியாலம் முன்னதாக வித்தியாலயத்தைத் தரிசித்தேன். அந்நேரத்திலிருந்து விழா முடியும் வரையும் என் இதயத்தில் நீங்காத நினைவலைகளாக இடம்பிடித்த நிகழ்வுகளை உங்கள் முன் பகிர்ந்து கொள்வதில் பெருமையடைகின்றேன்.

வெள்ளிவிழாவானது எல்லாப்பாடசாலைகளிலும் நடைபெறுகின்ற விழாவைப் போல் அல்லாது மிகவும் வித்தியாசமான முறையில் தமிழர்களின் பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்களை மையமாகவைத்து நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் விழாவானது ஆரம்பம் முதல் இறுதி வரை நடைபெற்றது. விழாவில் நிகழ்ச்சி நிரல் முதல் அமர்வு, இரண்டாம் அமர்வு என இரு பகுதிகளாக பிரிக்கப்பட்டு முற்பகல் நிகழ்வு, பிற்பகல் நிகழ்வு என இரு நேரங்களையும் மையப்படுத்தி முழுநாள் விழாவாக நடைபெற்று முடிந்தது பெருமைக்குரிய விடயமாகும்.

**நிகழ்ச்சி நிரல்**

நிகழ்ச்சிநிரலானது ஒழுங்கானமுறையில் திட்டமிட்டு தயாரிக்கப்பட்டு இரு அமர்வுகளிலும் காலம், நேரம், இடம், தலைமை, பிரதம அதிதிகள், சிறப்பு அதிதிகள், கௌரவ அதிதிதிகள், அழைப்பு அதிதிதிகள் என்பன இடம்பெற்றதோடு அவ் அதிதிகள் அனைவரும் தமிழர் பண்பாட்டு விழுமியங்களை பேணும் வகையில் கௌரவிக்கப்பட்டமை சிறப்பியல்பாகக் காணப்பட்டது.

**பண்பாட்டு ஊர்வலம்**

பண்பாட்டு ஊர்வலமானது ஏனைய பாடசாலைகளில் விழாக்களில் நடைபெறுகின்ற ஊர்வலங்களில் இருந்து மிகவும் வித்தியாசமான முறையில் காணப்பட்டமை சிறப்பம்சமாகும். ஏனையபாடசாலைகளில் மேல்நாட்டுப்பாணியில் அதிதிகள் உடையணிந்து வருவது வழக்கம் ஆனால் இவ் விழாவின் போது அதிதிகள் தமிழர் பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்களுக்கு அமைவாக உடையை அணிந்து வந்தமை என்மனதில் நீங்காத தன்மையினை ஏற்படுத்தியது.

அதிதிகள் அணைவரும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருந்து அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர், பழையமாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அனைவரும் வரவேற்று அதன் பின் பாடசாலை மாணவர்களினால் தமிழர் பண்பாட்டு முறையில் மேளவாத்தியம்முழங்க, கும்மி, நடனம், கரகம், வசந்தம், மீனவர் நடனம், சுளகு நடனம் என்பன மாணவர்களின் அபிநயத்துடன் பாடசாலையின் பிரதான வீதியினூடாக அதிதிகள் அழைத்து வரப்பட்டு வித்தியாலயத்தின் முகப்பு வாசலில் ஆராத்தி எடுக்கப்பட்டு அதிதிகளுக்கு திருநீறு, சந்தனம், குங்குமம் நெற்றியில் இட்டு பின்னர் அவர்களுக்கு வட்டா வைத்து கையில் கொடுத்து அதன்பின் அவர்களை அன்புடன் வரவேற்று பாடசாலை வளாகத்தில் உள்ள மேடைக்கு அழைத்துச் சென்றனர்.

**மங்கல விளக்கேற்றல்**

மெழுகுவர்த்திச் சுடரினால் மங்கலவிளக்கேற்றப்படும் இக்காலத்தில் தமிழரின் பாரம்பரியங்களை மையப்படுத்தும் வகையில் குத்துவிளக்குச் சுடரில் அதிதிகள் மங்கலவிளக்கேற்றிவைத்த காட்சி என்மனதில் நீங்கா இடம்பிடித்துள்ளது என்று குறிப்பிடலாம்.

**இறைவணக்கம்**

இந்துமத அனுஸ்டானப்படி மாணவர்களினால் தேவாரபாராயணம் இசைக்கப்பட்டு பின்னர் சம்பிரதாயமுறைப்படி தேசியக்கொடி, பாடசாலைக்கொடி அதிதிகளினால் ஏற்றப்பட்டதுடன் பின்னர் தமிழில் மாணவர்களினால் தேசியகீதம் இசைக்கப்பட்டது பெருமைக்குரிய விடயமாகக் காணப்பட்டது.

**பொருட்களின் கண்காட்சி**

அதிதிகள் அனைவரும் விவசாயம், மீன்பிடி பழங்காலத்தமிழர்கள் பயன்படுத்திய வீட்டு உபகரணங்கள், இசைக்கருவிகள், விவசாயத்திற்கு, மீன்பிடிக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள் நம் நாட்டு

உணவிற்குப் பயன்படுத்தப்படும் இலைக்கறி வகைகள் என்பன வைக்கப்பட்டிருந்த கண்காட்சிக் கலைநிகழ்ச்சியை பார்ப்பதற்கு அமைக்கப்பட்டிருந்த கூடாரங்களில் அமர்த்தப்பட்டனர்

**சிற்றுண்டி பகிர்தலும் மதிய போசனமும்**

நாகரீகம் வளர்ச்சியுற்ற இக்காலகட்டத்தில் தமிழரின் உணவுப்பழக்கங்களை மையப்படுத்தும் வகையில் சிற்றுண்டி வகைகளான கொழுக்கட்டை, முறுக்கு, பழம் அத்துடன் நன்னாரி வேர்விட்ட தேநீரும் வழங்கப்பட்டமை என் வாழ்நாளில் மறக்கமுடியாத ஒன்றாகும்.

தற்காலத்தில் எமது பிரதேசத்தில் நிகழ்கின்ற எந்த விழாக்களாக இருந்தாலும் (திருமண வைபவங்கள், பிறந்தநாள் கொண்டாட்டங்கள், திறப்புவிழா) மேலைநாட்டுப் பாணியில் கதிரை மேசைகளில் இருந்து அந்நாட்டு உணவு வகைகளாக கேக், போத்தலில் அடைக்கப்பட்ட குளிர்பானம், குடிநீருடன் மதிய உணவாக மச்சமாமிச உணவுகளால் தயாரிக்கப்பட்ட பிரியாணி சோறும் வழங்கப்படுவது வழக்கமாக உள்ளது. ஆனால் இவ் விழாவின் போது இயற்கையாக கிடைக்கின்ற தூய மரக்கறி இலை வகைகளுடன் கூடத்திற்கு அழைத்துவரப்பட்டு அதிதிகள் பார்வையிட்ட பின்னர் மீண்டும் அதிதிதிகள் பெற்றோர்கள் பால் தயிர் மோருடன் அறுசுவை உணவாக தயாரித்து நிலத்தில் பாய் விரித்து அதிதிகள் உட்பட விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் உட்கார வைத்து வாழைஇலையில் மேல் பரிமாறப்பட்ட காட்சி என்மனதில் நீங்காத இடத்தினைப் பிடித்துள்ளது குறிப்பிடத்தக்கது

**பண்பாட்டு நிகழ்வுகளும் பாரம்பரிய விளையாட்டுக்களும்**

வித்தியாலய அதிபர், ஆசிரியர்களின் அனுசரணையுடன் வித்தியாலய மாணவர்களினால் ஒழுங்கமைக்கப்பட்ட கலை கலாசார பண்பாட்டு நிகழ்வுகளான கோலட்டம், நாட்டுக் கூத்து, கிராமியப் பாடல்கள், வேடுவர் நடனம், காவடிச்சிந்து, வில்லுப்பாட்டு, வசந்தம், கரகம், மீனவர் நடனம் பாரம்பரிய விளையாட்டுக்களான பிள்ளையார் கட்டை, கிளித்தட்டு, வட்டக்காவடி, வார்போர், மட்டைப்பந்து, கொத்து இழுத்தல் முதலிய நிகழ்வுகள் பழையகால என்னுடைய நிகழ்வுகளை மீட்டிப்பார்ப்பதற்கு ஒரு களமாக அமைந்ததையிட்டு நான் பெருமைகொள்கின்றேன்.

**கௌரவிப்பு**

நலன்விரும்பிகள் பழையமாணவர்கள் அமர்ந்திருந்து

கொல்லநுலைக் கிராம மக்களின் கல்வி வளர்ச்சிகாக இப் பாடசாலையை உருவாக்குவதற்கு வித்திட்ட அமரர் கி.இரத்திணசிங்கம், திரு.ந.தயாசீலன்(ம.தெ.கோ. அதிகாரி), திரு.மா.தில்லைநாயகம், திரு க.இராசதுரை மற்றும் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு முதல் அதிபராக பணியாற்றி தற்பொழுது ஓய்வு நிலையில் இருக்கும் நானும் பிரதம அதிதிகளால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டமை பெரும் மகிழ்ச்சியை தந்ததும் என் வாழ்வில் மறக்கமுடியாத பெரும் நிகழ்வாக அமைந்தது.

எனவே இவ் வெள்ளிவிழாவானது எமது பிரதேச மக்களின் உள்ளங்களை மட்டுமல்லாது மட்டக்களப்பு மாவட்ட மக்களின் உள்ளங்களையும் கொள்ளைகொண்ட தமிழர்களின் பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்களை மையப்படுத்திய விழாவாக அமைந்தது என்றால் அது மிகையாகாது.

திரு.ம.பஞ்சாட்சரம் J.P
ஓய்வுநிலை முதல் அதிபர்
முதலைக்குடா – மேற்கு



கல்விப்பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களை வாழ்த்தி, அனுமதியட்டையை வழங்கி வைத்த போது..

# பண்புசார் ஆற்றுகை அழகியல் வெளிப்பாடும் அறிவுத்திறன் வலுவாக்கமும்

சமகாலத்தில் நுகர்வுப்பண்பாட்டுவெளியில் தங்கிவாழும் போக்கினால் லாபத்தை அடிப்படையாகக் கொண்டு கூட்டுச்செயற்பாடு வலுவிழந்து தனிமனிதராக்கப்பட்டு மனபலமற்று திண்டாடும் நிலைமையே உள்ளது. தேர்ச்சி மையக்கல்வித் திட்டத்தால் போட்டி அதிகரித்து மாணவர்களும், ஆசிரியர் சமூகமும் உளநெருக்கடிக்கு ஆளாகின்றனர். செயன்முறைக்கற்றலும் கூடிச் செயற்பட்டு வாழ்வதும் விலக்களிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் பாடசாலைார் விழாக்கள் மூன்றுபக்கம் அடைக்கப்பட்ட மண்டபத்தினை மையப்படுத்தி திட்டமிட்டு அந்நியப்படுத்தப்பட்டும் வருகின்றது. ஆனால் கொல்லநுலைப் பாடசாலையில் திறந்தவெளியில் தமிழர் கட்டிட வடிவமைப்பான வட்டக்களரியை மையப்படுத்தி நிகழ்வு வடிவமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்க முன்மாதிரியாகும்.



மண்சார் ஆற்றுகைவெளியின் கண்ணோட்டத்துடன் பண்பாட்டுக்கலை நிகழ்வு தயாரிக்கப்பட்டு கிராமமக்களும்,பாடசாலை சமூகமும் இணைந்து கூட்டுச்செயன்முறையை மையப்படுத்திநடாத்தப்பட்டிருந்தது. சிறுவர்கள் பிரமுகர்களை வரவேற்பதற்காக தமிழர்பாரம்பரிய நடன, பாட்டு, உடல்அசைவுகளினூடாகவும் வேட உடையினூடாகவும் பயிற்றப்பட்டிருந்தனர். மாணவர்களின் தொடக்க நிகழ்வுக்கான தயார்படுத்தல் பாடசாலை ஆசிரியர்கள், ஊர்மக்களின் ஒன்றிணைவுடன் வெளிப்படுத்தப்பட்டமை சிதைந்து செல்லும் மானிட உறவை ஒன்றுசேர்க்கலாம் எனும் உத்தியை வெளிப்படுத்தியது. சுளகு நடனம், விவசாயக்குடும்ப உபகரணம், வசந்தன்கூத்து, தமிழர் இசைமரபின் வெளிப்பாடு, கோலாட்டம், கூத்து ஆற்றுகைகள் என்பன திறந்தவெளியிலும், வட்டக்களரியிலும் நிகழ்த்தப்பட்டது.

கண்காட்சிக்கான "காட்சிப்படுத்தல்" உள்ளூரில் அம்மக்களின் வாழ்வியலிலும், தொழில்நிலையும், கொண்டாட்டத்திலும் பேசும் பொருளாக உள்ள பலபொருட்கள் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தன. நமது உணவில் போசாக்கைத் தரக்கூடிய இலைக்கறிவகைகளின் தன்மை, விவசாயம் மற்றும் மந்தை வளர்ப்பிற்கு பயன்படுத்தப்படும் பொருட்கள் தமிழர் இயற்கைச்சூழலுடன் நட்புக்கொண்டு கட்டப்பட்ட கட்டுமானப் பரண்கள், சிறாம்பிகள், பாதுகாப்பு அரண்கள், குடில்கள் அழகாகவும், அர்த்தமாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தது. இதில் வெளிப்படும் தொழிநுட்ப முறைகள் அளவுத்திட்டங்கள் பயன்படுத்தப்படும் பொருட்கள் என்பன பிரதானமாக இளம் சமூகத்தினருக்குக் கையளிக்கப்பட்டிருந்தது. சூழலுக்குச் சென்று செயன்முறையாகக் கற்கும் கற்பிக்கும் வெளியைக் காட்டியது.

பாடசாலையின் 25வருடத்திற்கான வெள்ளி விழாக்கொண்டாட்டமும் பண்பாட்டு வாழ்வியலின் முன்னிறுத்துகையும் திறந்தவெளி ஆற்றுகைமையச் செயற்பாட்டுடன் வலம் வந்தது. இதற்கு பாடசாலை அதிபரின் திட்டமிடலும், முகாமைத்துவமும் பாடசாலை ஆசிரியர்களின் கூட்டுச்செயற்பாடும் களநிலை அணுகுமுறையும் அர்பணிப்பும், உழைப்பும் நிகழ்வின் தரங்கணிப்பைக் கொடுத்தது. சமூகமும், பாடசாலை சமூகமும் சேர்ந்து கூட்டுமனவெளியில் ஊடாடும் இயல்புச்சூழலின் மாதிரியைக் கண்டு கொள்ள முடிந்தது. இதனூடாகவே "மனபலமுள்ள" மாணவ சமுதாயத்தை உருவாக்கும் நோக்கில் சஞ்சிகை ஒன்றும் அறிமுகப்படுத்தப்பட்டது. 21ம் நூற்றாண்டுக்குத் தேவையான மானிட கட்டுமான செயற்பாட்டு வெளியினை பல்கலைக்கழகம் முன்னெடுப்பதுபோன்று இப்பாடசாலையும் செயன்முறைப்படுத்துவது மகிழ்ச்சியளிக்கின்றது. மாணவர்கள், ஊர்மக்கள், ஆசிரியர் சமூகம் அனைவருக்கும் எனது அன்பான வாழ்த்துக்கள் தொடர்ந்து செயற்படுங்கள் கிழக்குப்பல்கலைகழக நுண்கலைத்துறை துணைபுரியும்.

**திரு.சு.சந்திரகுமார்,**
**தலைவர், நுண்கலைத்துறை,**
**கிழக்குப்பல்கலைக்கழகம்.**

# திறமைக்கான கௌரவம் - 2018

## நடனம்

வ.பேனுஸ்கா
தி.டேனுகா
வீ.யோகினி
வி.பிரித்திகா
யோ.குவேனியா
பு.கேதீசனா
பே.ரம்மியா
க.ரசிகலா
ம.கோபிகா
கோ.கேகலா
லி.கோபினா
தி.யனுஸ்கா
சு.கேஸ்கரன்
பா.சர்சியா
தி.றனுச்சன்
அ.சுஜீவன்
கு.தருணிதயன்
தி.அச்சனா
சோ.றதாயினி
கோ.ருத்திரா
கு.புஸ்பநந்தினி
நி.டேணுஜன்
ர.ரதுசன்
வ.ஸ்லேக்கா
பி.பிரசாந்தினி

## கதைகூறல்

அ.லக்சாயினி
தி.திலக்சன்
தெ.கதிஸ்கா
ந.தவரோஜன்
உ.தநுஷிவாரன்
கு.சியானு

## இசைக்கருவி வாசித்தல்

சு.டினேஸ்

## நாடகம்

தி.திலக்சன்
பாடல்
பு.தனுஸ்கா
நி.டர்மிகா
பு.ஷதுச்சினி
சு.கவிதர்சினி
சோ.கிருத்திகா
சூ.யதுஸ்கா
க.சுவேந்தினி
ச.கயாத்திரி
உ.நிலோதினி
த.டிலானி
ஜெ.கிதர்சனா
அ.தயாநிதி
க.கேசவநாயகன்
ப.மிமல்ராஜ்
த.தனுஸ்கரன்
சு.திரிசா
உ.ஜனுஸ்கா
ச.கயுபன்
பு.கஜேந்திரா
பு.மதுசன்
பே.கவிநிதா
க.பிறவினா
ச.ஜெயக்குமார்
இ.துஸ்யந்தன்
நே.தயாழினி
உ.கிருத்திகா
தி.கேஸ்கரன்
ப.லினோஜா
அ.டிலக்சினி

## பேச்சு

பா.றினேச்சயன்
ர.கஜந்தினி

## ஆக்கம்

த.பேணுஜன்
சு.வேணுஜன்
சி.கிந்துஜா
ம.மனுஸ்கா
பு.தனுஸ்கரன்
இ.டனுச்சன்
ச.ஹிதேஸ்
த.திபாகரன்
தி.சதுஸ்கா

## வரைதல்

பி.பிரதீபன்
தி.காஞ்சனா
தி.தேலிச்சனா
ப.நிதுசன்
பு.ரிசான்
யா.தேவராசி
ப.மிதுஜன்
ப.விதுசன்
மா.மேகேந்திரன்
க.கதுஜன்
த.விதுசன்

## உரையாடல்

சு.தஸ்யினி

## சிறுகதை

ப.தசாரினி

## பல்துறை

இ.சஸ்மிதா
அ.டனுசியா
ம.யோசினி
ந.அக்சனா
ர.குகன்
சி.நிதர்சனா
அ.வர்சாயினி
ப.பேணுஜா
ப.தர்மிதா
யோ.டிசானா
யோ.ஹர்சாஜினி

## பார்த்து அழகாக எழுதுதல்

அ.லட்சாயினி

## கிரகித்து விடைகூறும் திறமை

பி.கேதீஸ்

## வாசிப்பு

ஜீ.ஜஸ்மின்ஸ்ருதி
யோ.ஜனுஸ்காந்தன்
பி.மோகனதாஸ்
வா.பிரதினா
சு.ரோஜனி
இ.குமுதினி
த.டினேஸ்காந்தன்
வே.ரதிக்கா
ப.மதுசனா
க.குபேந்தினி

## மனக்கணிதம்

ஞா.நிதுசன்

## கட்டுரை

பே.தினேஸ்கரன்
ச.துஸ்யந்தினி
சி.பேரின்பவதி

## அறிவிப்பு

க.நிறோஜினி
ர.மதுசன்

## விளையாட்டு

ஆ.கேதீஸ்வரன்
ஜெ.கேருஜன்
த.தெய்வேந்திரன்
மா.கரிஸ்கா
சி.லக்சன்
த.கிறிசாந்தன்
ச.டினேஸ்கரன்
பு.சதுஸ்காந்தன்
ச.கோணேஸ்வரி
செ.கிந்துஜன்
நா.வினிதன்
பெ.மிதுசன்
பு.கஜேந்திரன்
க.நிசாந்தினி
த.கிருஸ்ணாளினி
ர.டனுஸ்கரன்
ஜெ.மோகனப்பரியன்
இ.கேதீஸ்வரன்
த.குணசீலன்
வே.வதுஸ்கரன்
கி.ரணித்தா
அ.அனிஸ்டா
த.அனுசியா
இ.டுஜானா

## பாடல்

த.தனுஸ்கா
கு.நிலாணி
கவிதை
பி.தீக்குமார்
க.நிறோஜன்
க.சபிதா
டி.ரஜீவன்
நா.தனேச்சினி
ச.கிரிஜா
ம.கயானி

## தலைமைத்துவம்

நே.கயாழினி
நா.ஜனனி
ஞா.தினேஸ்
இ.இந்துசா
க.திவ்வியம்
சா.தட்சாயினி
ஜெ.தனராஜ்
க.நிசாந்தினி
ப.தனுசன்
பு.கஜேந்திரன்
பு.ரிசாந்தன்









26.11.2018ம் திகதியிலிருந்து விளையாட்டுப்பயிற்சியில் ஈடுபட்ட போது…